# தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

## பெரம்பலூர் மாவட்டம்

பெரம்பலூர் மாவட்டம் தழுதாழை ஊராட்சியில் கணினி வரைபட உதவியுடன் இயங்கும் மரக்கடைசல் இயந்திரம் கீழ்காணும் தொழில்நுட்ப விவரப்படி தேவைப்படுகிறது.

**தேவைப்படும் இயந்திரத்தின் குறைந்தபட்ச தொழில்நுட்ப விவரங்கள்:**

| | |
|---|---|
| இயந்திரம் | : கணினி வரைபட உதவியுடன் இயங்கும் மரக்கடைசல் இயந்திரம் |
| வகை | : மின்சார இயந்திரம் |
| தொழில்நுட்பம் | : CNC மர முப்பரிமாண வடிவமைப்புடன் மென்பொருளுடன் கூடிய CNC மரம் கடையும் இயந்திரம் மற்றும் தேவையான கணினி உள்ளிட்ட உபகரணங்கள் |

**நிபந்தனைகள்:**

1. நிறுவனம் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் தொடர்புடைய துறையில் பணியாற்றியிருக்க வேண்டும். அதற்கான ஆவணங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. குறைந்தபட்ச 3 ஆண்டுகளுக்கு குறையாத இயந்திர உத்திரவாதமும் 5 ஆண்டுகளுக்கு தொடர் பராமரிப்பு உதவியும் அளித்தல் வேண்டும்.
3. வேலையின் மதிப்பில் 10% முன்பணமாக வழங்கப்படும். முன்பணத்திற்கு ஈடான வங்கி உத்திரவாதம் அளித்தல் வேண்டும்.
4. செயலாக்க அலுவலருடன் தொடர்புடைய வேலை உத்தரவு அளிக்கும் நிறுவனம் விரிவான பிணைமுறி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
5. வேலை உத்தரவு வழங்கப்படும் நாளிலிருந்து 3 மாதத்திற்குள் இப்பணி முடிக்கப்பட வேண்டும். தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் 2% அபராதம் விதிக்கப்படும்.
6. ஒப்பந்த மதிப்பில் 5% பிணைவைப்பு தொகையாக நிறுத்தி வைக்கப்படும்.
7. முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் இயந்திர இயக்கம் குறித்து போதுமான பயிற்சி அளித்தல் வேண்டும்.

மேற்காணும் விவரப்படி தேவைப்படும் இயந்திரம் விற்பனை செய்திட ஆர்வமுள்ள தொழில்முனைவோரிடமிருந்து விருப்ப விண்ணப்பங்கள் பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தால் 15.02.2019 மாலை 5.00 மணிக்கு முன்னதாக வரவேற்கப்படுகின்றன.

இது குறித்த விவரங்களை பெரம்பலூர் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலகத்தில் பணி நேரங்களிலும், www.perambalur.nic.in இணையதளம் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம்.

(ஒம்.) வே. சாந்தா,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரம்பலூர் மாவட்டம்.

// உண்மை நகல் // உத்தரவுப்படி //

for [signature] 9.2.19
திட்ட இயக்குநர்,
த.மா.ஊ.வா.இ, பெரம்பலூர்.

9/2/19